# Australia - New Zealand Nagarathars' National Summit 2011

## ஆஸ்திரேலியா நியூசிலாந்து நகரத்தார்களின் தேசிய மாநாடு ஏப்ரல் 23, 24 2011 தேதிகளில் சிட்னியில் நடைபெற்ற போது நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

1 . நகரத்தார் சங்கம் ஆஸ்திரேலியா இணைய தளத்தில் திருமண சேவை தொடங்குவது - விருப்பமுள்ள பெற்றோர்கள் திருமணத்திற்காக இருக்கும் தங்கள் பிள்ளைகளின் விபரங்களை நகரத்தார் சங்கம் ஆஸ்திரேலியா இணைய தளத்தில் வெளியிட வசதி செய்வது.

2 . புதிதாகக் குடியேறுபவர்களுக்கும் மாணவர்களுக்கும் உதவும் நோக்கோடு நமது சங்கங்களின் இணைய தளங்களில் கல்வி, வேலை வாய்ப்பு, உறுப்பினர்களின் தொழில் விபரங்கள் தருகின்ற லின்கெடின் போன்ற பயனுள்ள இணைப்புகளைத் தருவது.

3 . மற்ற மாநில நகரத்தார்களின் செய்திகளையும், சங்கங்களின் நிகழ்ச்சி விபரங்களையும் அவரவர் இணைய தளங்களில் வெளியிடுவது.

4 . விடுமுறை நாட்களில் குழந்தைகளை மற்ற நகரத்தார் வீடுகளுக்கு அனுப்பி குழந்தைகளுக்கிடையே நட்பும், நமது பண்பாடும் வளர வழி செய்வது.

5 . நகரத்தார்கள் தங்கள் சொத்துக்களில் ஒரு சிறிய பகுதியை நகரத்தார் சமூக மேம்பாட்டுக்காக எழுதி வைப்பது பற்றி அடுத்த மாநாட்டில் விவாதிப்பது.

6 . ஆஸ்திரேலியாவில் நகர விடுதி கட்டும் தொலை நோக்குத் திட்டத்திற்கு நிதி திரட்டும் முன்பாக, நமது சரியான தேவைகளை அறியவும், முதலீட்டிற்கு வரும் வருமானம், விடுதி பராமரிப்பு செலவுகள் பற்றி ஆராயவும், டிரஸ்ட் போன்ற சட்ட ரீதியான அமைப்புகளைப் பற்றித் தெரிந்து கொள்ளவும் மேலும் ஆய்வு செய்வது.

அழகப்பன் முத்து
நகரத்தார் தேசிய மாநாடு 2011 அமைப்புக்குழுத் தலைவர்
சிட்னி 24/04/2011

-oOo-